1994 மே 4]

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுகாறும் 380 நபர்களுக்கு நிரந்தர பணிகள் வழங்கப்பட்டுள்ளன. இந்த ஆண்டும் காலியாக உள்ள இடங்களாக கருதப்பட்டு 250 பேருக்கு நிரந்தர பணியிடங்கள் வழங்கப்பட இருக்கின்றன. இதய தெய்வம் புரட்சித் தலைவியினுடைய ஆட்சியில் இந்த ஆண்டு புதிதாக அந்தப் பணிக்கு பெண்களையும் நியமிப்பதாக ஆணை பிறப்பித்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 515, திரு. கா.பூ. முனுசாமி, மாண்புமிகு வனத்துறை அமைச்சர்

515—

எரிசக்தி மரம் பயிரிடும் திட்டம் மூலம் வேலைவாய்ப்பு வசதி

*16112—திரு. கா.பூ. முனுசாமி:

மாண்புமிகு வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எரிசக்தி மரம் பயிரிடும் திட்டத்தினைச் செயல்படுத்த எந்தெந்த மாவட்டங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன ?

(ஆ) கிராமப்புற மக்கள் இதன் மூலம் வேலை வாய்ப்பு பெற அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ், வனத்துறை அமைச்சர்:

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தமிழ்நாட்டில் கன்னியாகுமரி மற்றும் நீலகிரி ஆகிய மாவட்டங்களைத் தவிர்த்து மற்ற அனைத்து மாவட்டங்களும் எரிசக்தி தேவையான மாவட்டங்கள் எனக் கருதி சிடா உதவியுடன் செயல்படுத்தப்படும், சமூக வனத் திட்டம் மற்றும் மத்திய அரசு நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் ஊரக விறகு மரத் திட்டம் வாயிலாக எரிசக்தி மரங்கள் வளர்க்கும் திட்டம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

(ஆ) இத்திட்டங்கள் வாயிலாக ஆண்டுதோறும் 91 லட்சம் மனித நாட்கள் வேலை வாய்ப்பு உருவாக்கப்பட்டு கிராமப்புற ஏழை மக்கள் பலன்பெற வகை செய்யப்பட்டுளது.

1994 மே 4

திரு. கா. பூ. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தின் வாயிலாக தர்மபுரி மாவட்டத்தில் எவ்வளவு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு செயல் படுத்தப்படுகிறது. அதே நேரத்தில் எவ்வளவு மனித நாட்கள் வேலை தர்மபுரி மாவட்டத்தில் நடைபெற்றிருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏற்கனவே இந்த சட்டமன்றத்திலே இது குறித்து ஒரு கேள்வி எழுப்பியிருக்கிறார்கள். அதற்கு நான் பதிலளித்து இருக்கிறேன். அது போன்று இந்த ஆண்டு மானியக் கோரிக்கையினுடைய விவாதத்திலேயும் இது சார்பாக தெளிவாக எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. எனவே தமிழகத்தை பொறுத்த வரையில் ஒட்டுமொத்தமாக தமிழகத்தில் மூன்று திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்தத் திட்டங்களின் அடிப்படையில் ஆண்டுதோறும் 2047 லட்சம் ரூபாய் செலவழிக்கப்பட்டு வருகிறது. தமிழகத்தில் இந்தத் திட்டத்தின் மூலமாக பல்வேறு பஞ்சாயத்துக்களில் மரங்கள் வளர்க்கப்பட்டு அதன் விற்பனையின் மூலம் கிடைக்கும் வருவாயில் 60 சதவீதம் பஞ்சாயத்துக்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-55

திரு. கா. பூ. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் கிராமப்புறங்களில் இருந்து தொழிலாளர்கள் நகரத்திற்கு வரக்கூடாது என்று பல திட்டங்களைத் தீட்டி இருக்கின்ற கருத்தின் அடிப்படையில், இந்தத் திட்டத்தின் அடிப்படையில் இந்த நிதி ஆண்டில் தர்மபுரி மாவட்டத்திற்கு அதிக நிதி ஒதுக்கி மேலும் மனித நாட்கள் வேலை வாய்ப்பை ஏற்படுத்த அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு லாரன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு தர்மபுரி மாவட்டத்திற்கு அதிக நிதியை ஒதுக்கீடு செய்வதற்கு ஏற்கனவே திட்டமிடப்பட்டுள்ளது. இந்த ஆண்டு நிறைவேற்றுவது மட்டுமல்ல தொடர்ந்து ஒரு 5 ஆண்டு திட்டமாக 60 கோடி ரூபாய் சிடா உதவிப் பெறுகிற திட்டம் இன்றைக்கு பெறப்பட்டு அதன் மூலமாக மிகச் சிறப்பான திட்டம் தயாரிக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினருக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.